மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 63/2024

பெயர் : ஜெயலட்சுமி (DW1)

த/பெ : சுப்பா நாயக்கர்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20 th day of February 2026.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

**பி.வா.சா ஆவணம் – 1** 03.06.2009 தேதியிட்ட 2 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த பட்டா மாறுதல் மனு நகல் மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் நகல்

(கற்றறிருந்த வாதி தரப்பு வழக்கறிஞரால் மேற்படி பட்டா மாறுதல் மனுவில் கையெழுத்து இல்லை என்றும் இணைக்கப்பட்ட ஆவணங்களில் முதல் நிலை ஆவணங்கள் குறித்து எந்த விளக்கமும் இல்லை என்று கூறி ஆட்சேபனை செய்யப்பட்டது.ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும்).

**பி.வா.சா ஆவணம் – 2** 07.12.2009 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பட்ட நகல்

**பி.வா.சா ஆவணம் – 3** 07.12.2009 தேதியிட்ட வட்டாட்சியருக்கு அனுப்பட்ட நகல்

(பி.வா.சா ஆவணம் 2 மற்றும் 3 ஆவணங்களில் கற்றறிருந்த வாதி தரப்பு வழக்கறிஞரால் மேற்படி பட்டா மாறுதல் மனுவில் கையெழுத்து இல்லைஎன்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும். )

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1)இந்த வழக்கை யார் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தனலெட்சுமி தாக்கல் செய்துள்ளார்.வாதி தான் விலைக்கு வாங்கியிருப்பதாக கோரி தாக்கல் செய்துள்ளார்.என்னுடன் பிறந்தவர்களில் 1.சுப்புலட்சுமி ,2.ராகவ பெருமாள், 3 வது நான், 4.தனலெட்சுமி, 5.ரகுநாயகி , 6.ஜெயராமன், 7. கிருஷ்ணவேணி, 8.சுப்புராமன், 9.ராஜராமன், 10. அழகம்மாள் என்ற பாமா என்றால் சரிதான்.

2)ராகவ பெருமாள், ஜெயராமன், கிருஷ்ணவேணி ஆகியோர்கள் மீது மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.நான் கிருஷ்ணவேணிக்காக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.1 ஆம் பிரதிவாதி ராகவபெருமாள் வழக்கு நிலுவையில் உள்ளபோது காலமாகிவிட்டார் என்றாலும் அவருடன் வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்றாலும் சரிதான்.

3)நான் எந்த ஆண்டில் பிறந்தேன் என்றால் 1944 எனது வயது 82.இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கும் தனலெட்சுமி ஜீலை 2010 வரை சுமுகுமான உறவில் இருந்தோம் என்றால் இல்லை எனது தாயார் இறப்பு வரை சுமுகமாக இருந்தோம்.அதன்பிறகு சுமுகமான உறவு இல்லை.எனது தாயார் 2008 ஆம் ஆண்டில் இறந்து போனார்.எனது சகோதரர் ராஜராமன் தூத்துக்குடி மாண்பமை முதன்மை நீதிமன்றத்தில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை கோரி அ.வ எண் 40/2008 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் அது முடிந்துவிட்டது.மேற்படி வழக்கில் நான் 5 வது பிரதிவாதி என்றாலும் வாதி தனலெட்சுமி 6 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான்.

4)அந்த வழக்கில் விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் நான் அந்த வழக்கில் பிவாசா 3 ஆக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரிதான்.அந்த வழக்கில் வாதி ராஜராமனுக்கு ஆஜரான வழக்கறிஞர் தான் இந்த வழக்கில் எனக்கும் 7 ஆம் பிரதிவாதியான கிருஷ்ணவேணிக்கும் ஆஜராகிறார் என்றால் சரிதான்.எனக்கும் ராஜராமனுக்கும் சுமுகுமான உறவு உள்ளது என்றும் நான் இன்றும் நீதிமன்றத்திற்கு அவருடன் வந்தேன் என்றாலும் சரிதான்.

5)அ.வ எண் 40/2008 வழக்கில் இந்த வழக்கின் தபசில் சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.என்னுடைய மூத்த சகோதரி சுப்புலட்சுமியின் மகளை தான் 6 ஆம் பிரதிவாதி ஜெயராமன் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான்.சுப்புலட்சுமி 31.01.2026 அன்று காலமானார் என்றாலும் 01.02.2026 வாலசமுத்திரத்தில் நடந்த இறுதிசடங்கில் நான் கலந்து கொள்ளவில்லை என்றாலும் சரிதான் எனக்கு தகவல் சொல்லவில்லை.அந்த இறுதிசடங்கில் ராஜராமன் கலந்து கொண்டார் என்றால் சரிதான்.எனக்கு தகவல் சொல்லவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6)இந்த வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் சண்முகபுரத்தில் உள்ளது.அதன் விஸ்திரனம் என்ன என்றால் 8 ஏக்கருக்கும் கூடுதலாக உள்ளது.அதன் மால்கள் என்ன என்றால் ஒருபக்கம் மட்டும் ராகவபெருமாள் இடம் உள்ளது மற்ற மூன்று பக்கம் உள்ளவர்களின் பெயர் எனக்கு தெரியவில்லை.நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc படித்துள்ளேன்.தமிழ், ஆங்கிலம் இரண்டும் தெரியும் என்றால் சரிதான்.சண்முகபுரம் கிராமம் ரிசர்வே எண் 65 ல் மொத்த விஸ்திரனம் 16 ஏக்கர் 33 செண்ட் என்றால் சரிதான்.

7)மேற்படி சொத்தானது 11.08.1952 ஆம் தேதியிட்ட கிரைய ஆவண எண் 1103/1952 படி எனது தகப்பனார் சுப்பாநாயக்கர் பெருமாள் ரெட்டியிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.**(மேற்படி ஆவணம் வா.சா ஆவணம் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8)எனது தகப்பனார் பாத்தியத்தை நான் ஒத்துக்கொள்கிறேன் என்றால் சரிதான்.24.09.1962 ஆம் தேதியன்று உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் கேள்விபட்டிருக்கிறேன் ஆனால் என்னிடம் காட்டப்படும் இந்த ஆவணம் தானா என்று எனக்கு தெரியாது.நான் மேற்படி உயில் ஆவணத்தை அ.வ,எண் 40/2008 வழக்கில் பார்த்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.அந்த உயில் ஆவணத்தின் படி எனது தகப்பனார் 4 ஆண்வாரிசுகளான ராகபெருமாள், ஜெயராமன், சுப்பராமன், ராஜராமன் ஆகியோருக்கு மட்டுமே அவருடைய அசையும் மற்றும் அசையா சொத்துக்களை எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

9)உயில் ஆவணத்தில் பெண் மக்களுக்கு அவருடைய எஸ்டெட் சொத்துக்களிலும் பருத்தி, பஞ்சு வியாபாரங்களிலும் லேவதேவி முதலியவைகளில் எவ்வித பாத்தியமும் கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.என் தகப்பனார் 17.12.1963 ல் காலமானார்.காலமான பின்னர் அந்த உயில் உர்ஜிதத்திற்கு வந்தது என்றால் சரிதான்.அதன்பிறகு 1977 ல் நடந்த குடும்ப ஏற்பாட்டில் ரிசர்வே எண் 65 ல் 16 ஏக்கர் 33 செண்டில் தென்புறம் 8 ஏக்கர் 16 செண்ட் 1 ஆம் பிரதிவாதியான ராகவபெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல முழுவதும் அவருக்கு ஒதுக்கப்பட்டது.

10)ரிசர்வே எண் 65/2 உட்பிரிவு செய்யப்பட்டு 8 ஏக்கர் 16 செண்ட் மட்டும் தான் ராகவபெருமாள் பெயருக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல.09.03.1977 ஆம் தேதியன்று ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவண எண் 155/77 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.மேற்படி பாகப்பிரிவுல பத்திரத்தில் ராகவபெருமாளுக்கு 8 ஏக்கர் 16 செண்ட் தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை.மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் சொல்வது போல 16 ஏக்கர் 33 செண்ட் ஒதுக்கியதாக துலங்காது என்றால் சரியல்ல.

11)ராகவபெருமாளுக்கு முழு சொத்தும் எவ்வாறு பாத்தியப்பட்டது என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.கே.சண்முகபுரம் கிராமம் ரிசர்வே எண் 65 ல் மொத்த விஸ்திரனமான 16 ஏக்கர் 33 செண்டில் வடபுறம் 8 ஏக்கர் 16 செண்ட்டிற்கு தான் இந்த வழக்கு என்றால் சரிதான்.இந்த வழக்கில் உட்பிரிவு சர்வே எண் 65/1 என்றால் சரிதான்.பாகப்பிரிவினை ஆவணத்தில் 65/1 சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.எனக்கு ராகவபெருமாள் பிறப்பித்துக்கொடுத்ததாக சொல்லக்கூடிய ஆவணம் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான்.**(மேற்படி 09.03.1977 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அசல் வா.சா ஆவணம் 7 ஆக குறியிடு செய்யப்படுகிறது)**மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்டதாக குறுக்கு கோட்டிட்டு காணப்படுகிறது.

12)மேற்படி ஆவணத்தை இந்த வழக்கில் தாவா சொத்து ராகவபெருமாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.மேற்படி பிராது தபசில் சொத்து 1 ஆம் பிரதிவாதி ராகவபெருமாளுக்கு பாத்தியம் ஏற்பட்டது என்பதற்கான கிரைய ஆவணங்களையோ, நன்கொடை ஆவணங்களையோ, அவருடைய அனுபவத்தை காண்பிக்கக்கூடிய ஆவணங்களையோ நான் பார்க்கவில்லை என்றாலும் நான் கேட்கவில்லை என்றாலும் சரிதான்.

13)மேற்படி ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.எனது பெயரில் பிறப்பிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய வா,சா 7 ஆவணத்தின் அடிப்படையில் 1977 ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டு வரை நான் எனது பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.நான் வெளியூரில் இருந்ததால் நான் பெறவில்லை.1977 லிருந்து 2009 வரை எனது பெயரில் தாவா சொத்திற்கு தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான்.

14)நான் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் கூலியாட்களை வைத்து விவசாயம் செய்து அனுபவம் செய்தததாக சொல்லியதற்கு 10(1) அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.வா,சா ஆ 7 ஆவணம் ராகவபெருமாளுக்கு எந்தவித பாத்தியமும் இல்லாமல் பிறப்பித்து கொடுத்த மோசடியான ஆவணம் என்றாலும் அது நடைமுறை படுத்தப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் சொத்தின் அனுபவம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

15)ராகவபெருமாள் உயிருடன் இருந்தவரைக்கும் இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றாலும் அவருடைய வாரிசுகளும் இந்த வழக்கில் ஆஜராகிவில்லை என்றால் சரிதான்.தாவா சொத்தை பொறுத்து 02.04.1978 லிருந்து 6 ஆம் பிரதிவாதி அவரது பெயரில் வாசா ஆ 4 ன் பிரகாரம் தீர்வை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான், பொது சொத்து என்பதால் அவர் பெயரில் செலுத்தியுள்ளார்.

16)1978 லிருந்து 2009 வரைக்கும் 6 ஆம்பிரதிவாதி ஜெயராமன் பெயரில் தான் தீர்வை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.1978 ஆம் ஆண்டிலேயே லேண்ட் ரிஜிட்டர் அவர் பெயரில் தான் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.தாவா சொத்திற்கு 30.07.1984 ஆம் ஆண்டிலேயே வழக்கு சொத்திற்கு வாசா ஆ 5 ஆவணமான பட்டா 6 ஆம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.13.03.1997 ல் தபசில் சொத்திற்கு 6 ஆம் பிரதிவாதி வாசா ஆ 2 பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதனால் தான் பட்டா மாறுதல் கோரி சமாபந்தியில் மனு கொடுத்தேன்.

17)02.11.2009 ஆம் ஆண்டில் வாசா ஆ 3 கணினி பட்டா 6 ஆம் பிரதிவாதி ஜெயராமன் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.மேற்கண்ட விவரங்களை நிரூபண வாக்குமூலம் பத்தி 2 ல் ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.நான் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை உண்மை தன்மையை மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல.ராகவபெருமாள் 21.10.2010 ஆம் தேதியில் காலமாகும் வரை 6 ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

18)வாசா ஆ 1 ஆனது தனலெட்சுமிக்கு ஜெயராமன் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் ரத்து செய்யக்கூடிய நடவடிக்கைகளை ராகவபெருமாள் எடுக்கவில்லை என்றால் சரிதான் நான் எடுத்துள்ளேன்.நான் வழக்கு தாக்கலுக்கு முன்போ அல்லது தாவா வழக்கிலோ மேற்படி ஆவணத்தை ரத்து செய்யக்கோரி எதிர் கோருரிமை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஜெயராமன் பெயருக்கு 2008 ஆம் ஆண்டில் தான் பட்டா ஏற்பட்டிருப்பதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

19)6 ஆம் பிரதிவாதி ஜெயராமன் ராகவபெருமாள் எனக்கு மோசடியாக பிறப்பித்து கொடுத்த வாசாஆ 7 ஆவணத்தை மறைக்க வேண்டிய அவசியமோ பட்டா பாஸ்புக் சட்டத்தின் படி தண்டிக்கப்படவேண்டிய அவசியமோ இல்லை என்றால் சரியல்ல.எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1968.எனது கணவர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தலைமை பொறியாளராக இருந்தார் என்றால் சரிதான்.நான் திருமணத்திற்கு பிறகு சென்னைக்கு குடியேறிவிட்டேன் என்றாலும் தற்போதும் சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றாலும் சரிதான்.

20)வாதிக்கு 1972 ல் திருமணம் ஆனது என்றால் சரிதான்.வாதியின் கணவர் நவநீதகிருஷ்ணன் தூத்துக்குடியில் அரசு கால் நடை மருத்துவராக பணிபுரிந்தார் என்றால் சரிதான்.அதனால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்யும் வரை தூத்துக்குடியில் இருந்தார் என்றால் சரிதான்.அவருடைய கணவர் ஒய்வு பெற்ற பின் அவரது கணவருடன் அமெரிக்க சென்றுவிட்டார் என்றாலும் தற்போதும் அங்கு தான் வசித்து வருகிறார் என்றாலும் சரிதான்.

21)வாசா ஆவணம் 2 முதல் வாசா ஆணவம் 5 வரை உள்ள ஆவணங்களில் மூலம் அனுபவித்து வந்த தாவா சொத்தை வாசாஆ 1 கிரைய ஆவணத்தின் மூலம் 6 ஆம் பிரதிவாதி வாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.ஆனால் அது தவறானது.மேற்படி கிரையம் குறித்து எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 03.06.2009 ல் தெரியவந்தது .நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிவாசா ஆவணம் 1ல் முதல் பக்கத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றாலும் தேதியும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான்.

22)03.06.2009 ஆம் தேதியன்று தான் பிவா.சா ஆவணம் 1 கொடுக்கப்பட்டது என்று ஒப்புகை சீட்டு எதுவும் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான் தொலைந்துவிட்டது.மேற்படி ஒப்புகைசீட்டு தொலைந்துவிட்டதாக சாட்சியத்தில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.பிவா.சா ஆவணம் 1ல் இணைக்கப்பட்டுள்ள செண்டில் மெண்ட் ஆவணம் 154/77 ல் அசல் தான் வாசா ஆவணம் 7 என்றால் சரிதான்.மேற்படி செண்டில் மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

23)மேற்படி ஆவணத்துடன் இணைந்த வில்லங்க சான்றிதழ் அசல் ஆவணம் எங்கு உள்ளது என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் அசல் வீட்டில் இருக்கும் என்று நினைக்கிறேன்.மேற்படி ஆவணத்தில் அசலை தாக்கல் செய்தததால் ஒளி நகல் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.பி.வா.சா ஆவணம் 1 ஐ தாக்கல் செய்ய எந்த முன்அனுமதியும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.பிவா.சா ஆ 1ல் பார்வை என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் கணினி பட்டா 227 ஐ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

24)26.07.2010 , 25.11.2009 வில்லங்க சான்றிதழ் பற்றி பார்வையிலோ , மனுவிலோ பிவாசா ஆவணம் 1ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.மேற்படி இணைப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ராமனுஜம் பெயரில் தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.எனது சகோதரர் அ.வ எண் 40/2008 வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் பட்டாமாறுதல் கோரி மனுகொடுத்தேன் என்றால் சரிதான்.வழக்கு நிலுவையில் உள்ளதால் என்னுடைய பெயரிலோ, வாதியின் பெயரிலோ பட்டா மாறுதல் வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.என்னுடைய சகோதரர் ராஜராமனின் மனைவியின் தகப்பனார் பெயர் தான் ராமனுஜம் என்றால் சரிதான்.ராமனுஜம் எங்களது தாய்மாமா என்றால் சரிதான்.

25)பி.வா.சா ஆவணம் 2 மற்றும் 3 ஆவணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் வருவாய் கோட்டாட்சியர் ஓட்டப்பிடாரம் மற்றும் கோவில்பட்டி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சீட்டு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதாடன்.பி.வா.சா ஆவணம் 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் வருவாய் துறையில் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை நிரூபணம் செய்தவற்கான எந்த வித ஆவணங்களும் தாக்கல் செய்யததால் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

26)பி.வா.சா ஆ 1 முதல் 3 வரையிலான ஆவணங்களுக்கு என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.மேற்படி பி.வா.சா ஆவணம் 2 மற்றும் 3 ஆவணங்கள் குறித்து எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.பிராது தபசில் சொத்தினை வாசா ஆ 2 முதல் 5 வரையிலான ஆவணங்கள் மூலம் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக 6 ஆம் பிரதிவாதி ஜெயராமன் அனுபவித்து வந்து வா.சா ஆ 1ன் படி சரியான பிரதிபலனை வாதியிடம் பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும் அதன் அடிப்படையில் அனுபவத்தை ஒப்படைத்துள்ளார் என்றாலும் வாதியின் அமைதியான அனுபவத்தை அ.வ எண் 40/2008 வழக்கின் வாதியான ராஜராமன் தூண்டுதலி்ன்பேரில் நான் இடையூறு செய்து வந்த காரணத்தினால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

27)2010 வரை வாதி தான் கிரையம் பெற்ற தாவா சொத்தை அமைதியாக அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.பொதுவாக ஒரு நபர் கிரையம் வாங்கும் போது 30 வருடம் வரை வில்லங்கம் பார்ப்பார்கள் என்றால் சரிதான்.2009 ஆண்டு வாதி கிரையம் வாங்கும்போது 1979 முதல் 2009 வரை வில்லங்கம் பார்ப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.1977 ல் எனக்கு பிறப்பிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய வாசா ஆவணம் 1 ஆனது துலங்காது என்றால் சரியல்ல.இந்த வழக்கும் அ.வ எண் 40/2008 வழக்கும் மக்கள் நீதிமன்றத்திற்கு சென்று முடிக்கப்பட்டு அதன்பின் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.**(மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு நகல் வாசாஆவணம் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

28)அ.வ எண் 40/2008 வழக்கானது 02.08.2024 ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.**(மேற்படி வழக்கின் தீர்ப்பாணை நகல் வாசாஆவணம் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வா.சா ஆவணம் 7 ல் நன்கொடை ஆவணத்தின் பதிவிற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலம் பத்தி 9 ல் 21.10.2010 தேதியன்று 6 ஆம்பிரதிவாதி மோசடி செய்தததாக மாவட்ட வருவாய் துறை அலுவலரிடம் மனு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அதற்கான மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

29)09.03.1977 ஆம் தேதி செண்டில் மெண்ட் ஆவணம் பிறப்பிக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி தான் பாகப்பிரிவினை ஆவணம் 155/1977 பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.அ.வ எண் 40/2008 வழக்கின் வா.சா ஆவணம் 7 அசல் ஜெயராமன் வசம் உள்ளது என்று அந்த ஆவணம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று என்னிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு நாங்கள் எல்லோரும் நம்பி கொடுத்தோம் என்று குறுக்குவிசாணை பக்கம் 3ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

30)இந்த வழக்கில் அதற்கு முரணாக நிரூபண வாக்குமூலம் பத்தி 13 ல் எனது தாயார் வீட்டில் வைத்திருந்த அசல் செண்டில் மெண்ட் ஆவணத்தை ஜெயராமன் களவு செய்துவிட்டதாக முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.வா.சா ஆவணம் 7 செண்டில் மெண்ட் ஆவணம் தாவா சொத்தில் எவ்வித பாத்தியத்தையும் அனுபவமும் இல்லாத 1 ஆம் பிரதிவாதி அந்த சொத்தினை அபகரிப்பதற்காக என்னுடன் வஞ்சிகூட்டு செய்து உற்பத்தி செய்த ஆவணம் என்பதால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

31)தாவா சொத்து ஜெயராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் 1 ஆம் பிரதிவாதி குடும்பத்தில் பேசி முடிவு எடுத்து வாசா ஆவணம் 7 செண்டில் மெண்ட் ஆவணம் கோடுகள் போடப்பட்டு ஜெயராமனிடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.சாட்சி கையெழுத்து செய்யக்கூடிய நபருக்கு அதன் சங்கதிகள் தெரியவேண்டும் என்று அவசியம் இல்லை என்றால் சரியல்ல.ஆவணத்தில் பிறப்பித்து கொடுக்கும் நபர் தனக்கு தெரியும் என்பதற்காக சாட்சி கையெழுத்து செய்கிறார் என்றால் சரியல்ல.பாகப்பிரிவு ஆவணம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலேயே வாசா ஆவணம் 7 மோசடியாக 1 ஆம் பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்டு அதில் கையெழுத்து பெறும்போது 6 ஆம் பிரதிவாதியின் கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

32)பாகப்பிரிவினை ஆவணம் பற்றி எனக்கு தெரிந்திருந்தும் அ.வ.எண் 40/2008 வழக்கில் அது ரகசியம் ஆவணம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.செண்டில் மெண்ட் ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதாலும் தான் அசல் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.வாசா ஆவணம் 1 தெரியவந்த பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்யும் வரை வாதி மீதோ 6 ஆம்

பிரதிவாதி மீதோ குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

33)எனக்கு , தனலெட்சுமி , கிருஷ்ணவேணி, ரங்கநாயகி ஆகியோர்களின் கணவர்கள் நல்ல வேலையில் பணியாற்றியதால் எங்களுக்கு திருமணத்தின் போது சீர்சிராட்டுகள் செய்து திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான்.வா.சா ஆவணம் 7 நன்கொடை ஆவணத்தில் நன்கொடை கொடுத்தற்காக குறிப்பிட்டடுள்ள காரணம் பொய்யானது என்றாலும் அது மோசடி ஆவணம் என்றாலும் சரியல்ல.

34)பிராது தபசில் சொத்து 6 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு 30 வருடங்களுக்கு மேலாக அவரது அனுபவத்திலும் அவரது ஆளுகையிலும் இருந்து வந்து அதனை வா.சா ஆவணம் 1ன் படி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதால் வாதி கோரக்கூடிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.தபசில் சொத்து எனக்க எவ்வித பாத்தியமும் உரிமையும் அனுபவமும் இல்லாத காரணத்தினால் தான் நான் எந்தவித எதிர்கோரிக்கையும் கோரவில்லை என்றால் சரியல்ல.என்னுடைய சாட்சியம் நம்பகத்தன்மை அல்ல என்பதால் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>6 ஆம் பிரதிவாதி குறுக்குவிசாரணை</u>

(வாதிகளின் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–திருமதி.ப.சுமதி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.